**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2018**

**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மொழியைப் படைத்தவர் யார்?
2. மொழியின் உயிர்நாடி எது?
3. பொருளற்ற ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
4. சொல்லின் வேராக அமைவது எது?
5. அரிய உயிர்கள் எளிய உயிர்கள் எவை?
6. தொல்காப்பியம் சொல்லை எத்தனை வகைப்படுத்தியுள்ளது?
7. பல்லவர் காலத் தமிழ் பற்றி அறியத் துணைபுரியும் இலக்கியம் எது?
8. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தின் ஆசிரியர் யார்?
9. தமிழில் மிகப் பழமையான கல்வெட்டு எது?
10. தமிழகத்தில் செப்பேடுகள் கிடைத்த இரு இடங்களைக் குறிப்பிடுக.
11. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் யார்?
12. மொழியியல் என்றால் என்ன?
13. வேர்ச் சொல் என்றால் என்ன?
14. சதுரகராதியின் ஆசிரியர் யார்?
15. உருபொலியனை இலக்கணிகள் எவ்வாறு அழைக்கின்றனர்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. மாத்திரை என்றால் என்ன?
3. ஒலியைத் தோற்றுவிக்கும் உறுப்புகள் எவை?
4. சார்பெழுத்து என்றால் என்ன?
5. தமிழ் மொழி வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் எவை?
6. சோழர்கால மொழியமைப்பைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை?
7. இந்திய மொழிகளை எத்தனை பிரிவுகளாகப் பகுக்கலாம்?
8. திராவிடம் – பொருள் தருக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மொழி வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் எழுத்து முறை குறித்து விவரிக்க.

2. (அ) தமிழ் மொழி வரலாற்றுச் சான்றுகளைக் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தென் திராவிட மொழிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

3. (அ) திராவிடம் – சொல் பயன்பாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழியியல் குறித்துக் கட்டுரை வரைக.

***